பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 11 திங்கட்கிழமை 27.09.2021 கதிர் 190

## கட்டுத்துவக்கு வெடித்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

பதுளை மாவட்டம், ரிதிமாலியத்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மகுலேமட பிரதேசத்தில் கட்டுத்துவக்கு வெடித்ததில் சேனையொன்றில் பணி புரிந்து கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர், பரிதாபகரமாக மரணமடைந்தார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது. ☞2

## புலம்பெயர் மக்களுடனான உறவுகள் பற்றி இலங்கை - பிரிட்டன் அமைச்சர்கள் பேச்சு



இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் பிரிட்டனின் தெற்காசியா, ஐக்கிய நாடுகள் மற்றும் பொதுநலவாய நாடுகளுக்கான இராஜாங்க அமைச்சர் விம்பிள்டனின் பிரபு அஹ்மத் ஆகியோருக்கிடையில் முக்கிய சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

நியூயோர்க்கில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்போது இலங்கையில் வர்த்தகம், துறைமுக நகரம் மற்றும் ஏனைய துறைகளில் காணப்படும் முதலீட்டு வாய்ப்புக்கள் மற்றும் சுற்றுலாத்துறையை மீண்டும் ஆரம்பித்தல் ☞2

## மேலும் 344 பேர் கைது!

தனிமைப்படுத்தல் சட்டவிதி முறைகளை மீறிய குற்றச்சாட்டில் கடந்த 24 மணிநேரத்தில் 344 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைவாக தனிமைப் படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 78 ஆயிரத்து 597 ஆக அதிகரித்துள்ளது எனப் பொலிஸ் தலைமையகம் ☞2

# புலம்பெயர் தமிழ் அமைப்புகள் கோட்டாவுடன் பேச நிபந்தனை

### சர்வதேச மத்தியஸ்தம் மிக அவசியம் என வலியுறுத்து; பொறுப்புக்கூறலில் உள்ளகப் பொறிமுறைக்கு எதிர்ப்பு

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப் புலம்பெயர் தமிழ் அமைப்புகளுடன் பேசத் தயார் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமெரிக்காவில் தெரிவித்திருந்த நிலையில், சர்வதேச மத்தியஸ்தம் மூலம், இலங்கை அரசுடன் பேச்சு நடத்தலாம் என்று புலம்பெயர் நாடுகளைத் தளமாகக் கொண்டு இயங்குகின்ற பிரதான மான 08 புலம்பெயர் தமிழ் அமைப்புகள் தீர்மானம் எடுத்துள்ளன. ☞2



## சர்வதேசத்தின் தலையீட்டை ஒருபோதும் ஏற்கமாட்டோம்!


### நாடு திரும்பிய பீரிஸ் திட்டவட்டம்




உள்நாட்டுப் பிரச்சினைகளை தீர்க்கும் பொறுப்பை சர்வதேசத்திடம் ஒப்படைப்பதற்கு இலங்கை ஒருபோதும் தயாரில்லை என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிரான சர்வதேசத்தின் அழுத்தங்களுக்கு ஒருபோதும் அடிபணியமாட்டோம் என்றும் அவர் குறிப்பிட்டார். ☞2

## மனைவியைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்த கணவன்



எம்பிலிப்பிட்டி - கரதமண்டிய பிரதேசத்தில் மனைவியைத் துப்பாக்கியால் கணவர் சுட்டுக் கொன்ற அதிர்ச்சிச் சம்பவம் பதிவாகியுள்ளது.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப்பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் எம்பிலிப்பிட்டி - நவநகர பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய பெண்ணே உயிரிழந்துள்ளார். ☞2

## வன்முறைக்குழுவின் ஐவருக்கும் மறியல்!

யாழ்., மருதனார்மடம் சந்தியில் கடந்த முதலாம் திகதி பழக்கடை வியாபாரி ஒருவரைத் தாக்கிய சம்பவம் குறித்து கைதுசெய்யப்பட்ட ஐவரையும் எதிர்வரும் 06ஆம் திகதி ☞2



## அல்வாயில் 2 வீடுகள் தீக்கிரை; ரவுடி 'வெட்டுக்குமார்' சிக்கினார்

விரிவான செய்தி ☞3

## படுகொலை சந்தேகநபர் மாட்டினார்!

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பல இடங்களில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவங்கள் மற்றும் படுகொலைச் சம்பவங்கள் ஆகியவற்றுடன் தொடர்பு ☞2

## புலம்பெயர் தமிழ்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு புலம்பெயர் தமிழ் அமைப்புகளுடன் பேசத் தயார் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளருடன் நடத்திய சந்திப்பில் குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பாக கனேடிய தமிழர் தேசிய பேரவை, பிரித்தானிய தமிழர் பேரவை, ஆஸ்திரேலிய தமிழ்க் காங்கிரஸ், நோர்வே ஈழத் தமிழர் அவை, அயர்லாந்து தமிழர் பேரவை, தென்னாபிரிக்கா அமைதி மற்றும் நீதிக்கான ஒற்றுமை குழு, பிரான்ஸ் தமிழீழ மக்கள் பேரவை, அமெரிக்க தமிழர் செயற்பாட்டுக் குழு ஆகிய 8 புலம்பெயர் தமிழர் அமைப்புகள் கூட்டாகக் கருத்து வெளியிட்டுள்ளன.

உலக நாடுகளில் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நோர்வே, ஐக்கிய இராச்சியம், கனடா, பிரான்ஸ், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, அயர்லாந்து ஆகிய நாடுகளைத் தளமாகக் கொண்டு இயங்கும் இந்த எட்டு அமைப்புகளும் புலம்பெயர் அமைப்புக்களில் மிக முக்கியமானவை.

பிரித்தானியா, அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளில் ஒன்று அல்லது இணைந்த சர்வதேச மத்தியஸ்தம் மூலம் இலங்கை அரசுடன் பேச முடியும் என்று இந்த எட்டு புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் தீர்மானம் எடுத்துள்ளன.

ஆனால், பொறுப்புக்கூறலில் உள்ளகப் பொறிமுறை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்கின்ற இலங்கை அரசின் நிலைப்பாட்டை முற்றாக நிராகரிப்பதாகவும் இந்த எட்டு புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் முடிவெடுத்துள்ளன.

ஜனாதிபதியின் அழைப்பு தாராள மனப்பான்மையின் வெளிப்பாடாக இருக்க முடியும் என்று நாம் நம்பவில்லை. சர்வதேச சமூகம் ஸ்ரீலங்காவுக்கு எதிரான நிலைப்பாட்டில் மிக இறுக்கமாக உள்ளது. சர்வதேச சமூகத்தை இந் நிலைப்பாட்டுக்கு கொண்டு சென்றதில் புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் பங்கும், பங்களிப்பும் காத்திரமானவை. ஆகவேதான், இலங்கை ஜனாதிபதி புலம்பெயர் தமிழ் அமைப்புகளுடன் பேச்சு நடத்த தயார் என்று பந்து ஒன்றை வீசி உள்ளார். ஜி. எஸ். பி. பிளஸ் சலுகைகள், சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் நிறுத்தப்படலாம் என்கிற பாரிய அச்சம் இலங்கைக்கு தொற்றியுள்ளது என்றும் இந்தப் புலம்பெயர் அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

இதேநேரம், அரசியல் கைதிகள் நிபந்தனை இன்றி விடுவிக்கப்பட வேண்டும், வடக்கு, கிழக்கில் படைத் தரப்பினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டும், பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும், பௌத்த ஆக்கிரமிப்புகள் நிறுத்தப்பட வேண்டும், காணாமல் போனோர் பிரச்சினைக்குத் தீர்வு தரப்பட வேண்டும், உள்ளூர் தமிழ்த் தலைமைகளுடனும் பேச்சு நடத்தப்பட வேண்டும் ஆகிய விடயங்களை நடைமுறைப் படுத்தி நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும் எனவும் இந்தத் தரப்புக்கள் கருத்துரைத்துள்ளன.

## மேலும்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மேல் மாகாணத்துக்கு உள்நுழையும் மற்றும் வெளியேறும் 13 இடங்களில் நேற்று மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளின் போது தனிமைப்படுத்தல் சட்டவிதி முறைகளை மீறிப் பயணித்த குற்றச்சாட்டில் 134 வாகனங்களில் பயணித்த 242 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

## புலம்பெயர் மக்களுடனான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியன குறித்து இருவரும் கலந்துரையாடியுள்ளனர்.

அத்துடன் புலம்பெயர் மக்களுடனான உறவுகள் மற்றும் நல்லிணக்கம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் இருவரும் ஆராய்ந்துள்ளனர்.

இதேவேளை, இலங்கையில் கொரோனாத் தொற்றுப் பரவலால் தடைகள் விதிக்கப்பட்டுள்ள போதிலும், உள்நாட்டு நிறுவனங்களால் பல்வேறு துறைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள கணிசமான முன்னேற்றங்கள் குறித்து அஹ்மத் பிரபுவுக்கு அமைச்சர் பீரிஸ் விரிவாக விளக்கியுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதன்போது விரைவில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு அமைச்சர் பீரிஸ், அஹ்மத் பிரபுக்கு அழைப்பு விடுத்துள்ளார் எனவும், அதனை அவர் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார் என்றும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

## வன்முறைக்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதனார்மடம் சந்தியில் பழக்கடை நடத்தும் நான்கு பிள்ளைகளின் தந்தை மீது கடந்த முதலாம் திகதி வாள்வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டது.

குறித்த சந்தேகநபர்களிடமிருந்து 3 வாள்கள், மோட்டார் சைக்கிள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகள் ஆகியன கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர்கள் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், அவர்களை எதிர்வரும் 06ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதனிடையே, யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்ற வாள்வெட்டு வன்முறைச் சம்பவங்கள் சிலவற்றை நாட்டிலிருந்து தப்பித்து, இந்தியாவுக்குச் சென்ற சிலரே வழிநடத்துகின்றனர் என முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## சர்வதேசத்தின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பிய வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், இன்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை அதன் தனித்துவங்களைப் பாதுகாத்துக்கொண்டு, இறையாண்மையுடன் வெற்றியை நோக்கிப் பயணிக்க அரசு வழிவகைகளை மேற்கொள்கின்றது.

இலங்கை எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலையை வெற்றிகொள்வதற்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

இலங்கையின் பிரச்சினைகளை உள்ளக நிறுவனங்களின் ஊடாகத் தீர்த்துக்கொள்வதற்கு முயற்சிக்கின்றோம்.

நாட்டு விவகாரங்களை வெளியக நிறுவனங்களுக்குப் பொறுப்புக் கொடுப்பதை அங்கீகரிப்பதில்லை.

ஐ.நா., அதன் சட்ட ஒழுங்குகளுக்கு அமைய அனைத்து நாடுகளையும் சமமாக மதிக்க வேண்டும் - என்றார்.

## மனைவியைத்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவத்துடன் தொடர்புடைய கணவன் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவர் பயன்படுத்திய துப்பாக்கியும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சந்தேகநபரை எம்பிலிப்பிட்டி நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை எம்பிலிப்பிட்டி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## கட்டுத் துவக்கு.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகுலேமட, ரிடிகஹஅராவ பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயது நபரே உயிரிழந்துள்ளார்.

கட்டுத்துவக்கைக் கைப்பற்றியுள்ள பொலிஸார் அதனைச் செயற்படுத்தியவரை கைதுசெய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பில் ரிதிமாலியத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## படுகொலை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டைய 'கனோஜி' என்ற வாள்வெட்டுக்குழு சந்தேகநபர் 2019ஆம் ஆண்டிலிருந்து தலைமறைவாக இருந்த நிலையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கும், மானிப்பாய் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கும் கிடைத்த இரகசிய தகவலையடுத்து சுதுமலை பகுதியில் வைத்து அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் கொக்குவிலைச் சேர்ந்தவர் எனவும், தனுரொக் குழு என்ற வாள்வெட்டு குழுவைச் சேர்ந்தவர் எனவும் கூறப்படுகின்றது.

மேலும், உப்புமடம் - கோண்டாவில் பகுதியில் காட்வெயார்கடை உரிமையாளரைத் தலையில் அடித்துப் படுகொலை செய்த வழக்கில் பிரதான சந்தேகநபரான இவருக்கு யாழ்.நீதிமன்றத்தில் இரண்டு பிடியாணைகள் உள்ளன எனவும், வினோதன் வீடு, அகிலசுமன் வீடு ஆகியவற்றின் மீது தாக்குதல் நடத்திய பிரதான சூத்திரதாரி இவர் எனவும், ராஜா கிறீம் கவுஸில் மோட்டார் சைக்கிளைப் பறித்துச் சென்றவரும் இவரே எனவும் கூறப்படுகின்றது.

மேலும், குறித்த சந்தேகநபரின் தாய் வெளிநாட்டில் இருக்கின்றார் எனவும், அவரின் உதவியுடன் ஓரிரு மாதத்தில் இலங்கையை விட்டுத் தப்பிக்க இருந்த நிலையில், குறித்த நபர் மாறுவேடத்தில் அடையாளம் காண முடியாதவாறு உருமாற்றம் செய்து தலைமறைவாகியிருந்த நிலையில் மானிப்பாய் - சுதுமலையில் வைத்து இவருடன் மூன்று பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம் -
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com



காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## புரட்டிப் போடுவது ஏனோ?

**சிறைச்சாலைகள் மற்றும் சிறைக்கைதிகள் புனர் வாழ்வு விவகாரங்களுக்கான முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தையினால் அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் வைத்து அச்சுறுத்தப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளை நீதியமைச்சர் அலி சப்ரி நேரடியாகச் சென்று சந்தித்து இருக்கின்றார்.**

**நல்ல விடயம். அவரும் ஒரு சிறுபான்மை இனத்தை சேர்ந்தவர்தான். பெரும்பான்மை இனத்தவர்களின் வாக்குகளில் தெரிவுசெய்யப்பட்டு, பௌத்த சிங்கள வாக்குகளினால் மட்டுமே அதிகாரத்துக்கு வந்தேன் என்று கூறும் ஒரு ஜனாதிபதியினால் தேசியப் பட்டியல் மூலம் எம்.பியாக்கப்பட்டு, நீதி அமைச்சர் பதவி வழங்கப்பட்டவர் அலி சப்ரி.**

**பௌத்த, சிங்களப் பேரினவாதத்தினால் சிறுபான்மை இனங்கள் படும் அல்லலும், அவஸ்தையும், அடக்குமுறையும் சிறுபான்மை இனத்தவரான நீதி அமைச்சர் அலி சப்ரிக்கு தெரியாதனவோ புரியாதனவோ அல்ல.**

**ஆனால், யாரால், யாருக்காகத் தாம் இந்தப் பதவியில் நியமிக்கப்பட்டார் என்று தாற்பரியம் அவருக்கு தெரியும். தமக்கான எல்லைப்பாடுகள், மட்டுப்படுத்தல்கள் எவை என்பதும் அவருக்கு புரியும். அந்த எல்லைகளைப் புரிந்துதான் மேற்படி கைதிகளின் சந்திப்புக்கு பின்னர் அவர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்லி இருக்கின்றார் என்று கருதவேண்டும். உண்மையில் லொஹான் ரத்வத்தை சிறைத்துறைக்கான இராஜாங்க அமைச்சராகத்தான் இருந்தார். அமைச்சரவை அந்தஸ்துள்ள முழு அமைச்சர் என்ற முறையில் சிறைகளும் நீதி அமைச்சின் கீழ்தான் வருகின்றன. அதன் கீழான அமைச்சுக்கே இராஜாங்க அமைச்சராக இருந்தார் லொஹான் ரத்வத்தை.**

**அந்த வகையில் பார்த்தால், அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் தமிழ் கைதிகளை துப்பாக்கிமுனையில் முழங்காலிட வைத்து அச்சுறுத்தப்பட்ட –அவர்களின் ஆன்ம கௌரவத்தைப் பங்கப்படுத்திய – இந்த அராஜக நடவடிக்கைக்காக நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் பகிரங்க மன்னிப்புக் கோரிய நீதியமைச்சர் அலி சப்ரியின் செயல் பாராட்டுக்கும் கௌரவத்துக்கும் உரியதாகிறது.**

**ஆனால் சிறைக்குள் அத்துமீறிப் புகுந்து புரியப்பட்ட இந்த கிரிமினல் குற்றத்துக்குப் பொறுப்பான சந்தேக நபர் இன்னும் கைது செய்யப்படவில்லை. உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் தெரியவில்லை, எடுக்கப்படும் என்றும் தெரியவில்லை**

**நடந்த விடயத்துக்கு மன்னிப்பு கேட்கும் நீதியமைச்சர், நீதியை நிலைநாட்ட முடியாமல் இருப்பதும், சட்டப்படி நடவடிக்கை எடுக்கச் செய்ய இயலாமல் இருப்பதும் வெட்கத்துக்கு உரியவை. சிறைக்குள் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் நெருக்கடிக்குள் – அழுத்தத்துக்குள் – சிக்கி இருக்கின்றார்கள். சொந்தமாக இயங்க வழியற்றிருக்கும் அவர்கள் சிறை நெருக்குவாரங்களுக்குள் உண்மை பேசுவது – அதுவும் வெளிப்படையாகப் பேசுவது – சாத்தியமற்றது என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை.**

**அவர்கள் இப்படி அச்சுறுத்தப்பட்டமை ஓர் இனவாதச் செயல் அல்ல என்பதைக் கைதிகள் ஒப்புக் கொண்டிருக்கின்றார்கள், அவர்கள் அநுராதபுரம் சிறையில் தங்களுக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாகக் கருதவில்லை என்றெல்லாம் நீதியமைச்சர் கதை விடுவது வெறும் புளுடா என்பது அவருக்கே தெரியும். அநுராதபுரம் சிறையில் காவலில் வைக்கப்பட்டிருக்கும் கைதிகள் அப்படித்தான் கூறமுடியும். அலி சப்ரியே அந்த இடத்தில் கைதியாக இருந்தால் அப்படித்தான் கூற வேண்டும், கூற முடியும். இது நீதியமைச்சர் அலி சப்ரிக்கும் தெரியும்.**

**தெரிந்திருந்தும் – புரிந்திருந்தும் – கைதிகளின் கருத்தை அவர் புரட்டிப் போட்டுப் பேசுவது ஏனோ?**

## தொற்றுப் பாதிப்புற்ற சிறுவர்களுக்கு பக்க விளைவுகள் ஏற்படுகின்றனவாம்!

கொவிட் தொற்றிலிருந்து குணமடைந்த பின்னர் பல்வேறு பக்க விளைவுகளால் (பல உறுப்பு நோய்த்தொற்றுகள்) பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை நாடளாவிய ரீதியில் அதிகரித்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இத்தகைய பக்க விளைவுகள் கொண்ட 25 சிறுவர்களுக்குகொழும்பில் உள்ள லேடி ரிட்ஜ்வே சிறுவர்கள்மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என்று குழந்தை மருத்துவர் டாக்டர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

இந்த சிறுவர்கள் அனைவரும் கொவிட் தொற்றில் இருந்து குணமடைந்து பின்னர் வீட்டிற்குச் சென்று பல்வேறு பக்க விளைவுகளால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இந்த குழந்தைகளுக்கு மூளை, இதயம் மற்றும் சிறுநீரகத்தில் பல்வேறு கோளாறுகள், அதிகரித்த இதய துடிப்பு, நிமோனியா மற்றும் தொடர்ந்து காய்ச்சல் போன்ற அறிகுறிகள் இருக்கின்றன என்றும், இந்த சிறுவர்களில் பெரும்பாலானவர்கள் 5 முதல் 15 வயதுக்குட்பட்டவர்கள் என்றும் நிபுணர் கூறினார்.

கொவிட்நோய்த்தொற்றிலிருந்து குணமடைந்த சிறுவர்கள் ஆறு மாதங்கள் வரை இத்தகைய அறிகுறிகளை உருவாக்க முடியும் என்று தீபால் பெரேரா குறிப்பிட்டார். பக்க விளைவுகள் உள்ள சில சிறுவர்களுக்கு சிறந்த ஆன்டிபாடிகள் (பிறபொருள் எதிரிகள்) கொடுக்கப்பட வேண்டும் என்றும் அந்த சிறந்த ஆன்டிபாடிகளுக்கு அரசாங்கம் அதிக விலை கொடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

தொற்றுநோயிலிருந்து மீண்ட சிறுவர்களை ஆறு மாதங்களுக்கும் மேலாக கவனிப்பது முக்கியம் என்று அவர் தெரிவித்தார். இதற்கிடையில், கொழும்பில் உள்ள லேடி ரிட்ஜ்வே சிறுவர்கள்மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட கொவிட்டால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை 35 ஆகக் குறைந்துள்ளதாக டாக்டர் தீபால் பெரேரா கூறினார்.கொழும்பில் உள்ள லேடி ரிட்ஜ்வே சிறுவர்கள் மருத்துவமனையில் கொவிட் நோயால் பாதிக்கப்பட்ட சுமார் 200 சிறுவர்களுக்கு கொவிட் மூன்றாவது அலையின் தொடக்கத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

## ஜனாதிபதி செயலகத்தின் அதிகாரி தொற்றால் சாவு



ஜனாதிபதி செயலகத்தின் கணினி தொழில்நுட்பப் பிரிவின் தலைவர் துலன் விஜேரத்ன கொவிட் தொற்று காரணமாக உயிரிழந்துள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொவிட் தொற்றுக்குள்ளான அவர் கொத்தலாவல பாதுகாப்பு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார்.

அவர் சிறிலங்கா கடற்படையின் ஒரு அதிகாரியாவார். துலன் விஜேரத்ன கண்டி தர்மராஜா கல்லூரியின் பழைய மாணவர் மற்றும் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் பட்டதாரி ஆவார்.

## அல்வாயில் 2 வீடுகள் தீக்கிரை; ரவுடி 'வெட்டுக்குமார்' சிக்கினார்





யாழ். வடமராட்சி அல்வாய் வடக்கு மகாத்மா கிராமத்தில் வாள்வெட்டு குழுவின் அட்டகாசத்தில் இரு வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளமையுடன், மேலும் சில வீடுகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸர் வாள்வெட்டு குழு ரவுடியான வெட்டு குமார் என்பவரைக் கைது செய்துள்ளமையுடன், மேலும் சிலர் தலைமறைவாகியுள்ள நிலையில் அவர்களை தேடி வருகின்றனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருபவை வருமாறு:-

கடந்த 2 ஆம் திகதி மது போதையில் அல்வாய் வடக்கு மகாத்மா கிராமத்தைச் சேர்ந்த வாள்வெட்டு குழு ரவுடியான வெட்டுக்குமாரும் அவரது கூட்டாளிகளும் இணைந்து அப்பகுதியில் உள்ள வீடுகளுக்குள் புகுந்து பொருள்களை அடித்து நொறுக்கி வன்முறையில் ஈடுபட்டிருந்தனர்.

இதன் காரணமாக 6 குடும்பங்கள் தமது வீடுகளில் இருந்து வெளியேறி வேறு இடங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்நிலையில் மீண்டும் நேற்று முன்தினம் இரு வீடுகளுக்கு பெட்றோல் ஊற்றி தீ வைத்த அந்தக் கும்பல் அப்பகுதியில் உள்ள மேலும் சில வீடுகளின் ஜன்னல்களை உடைத்தும், சொத்துக்கள் உடமைகள் என்பவற்றுக்கும் தீ வைத்துள்ளது.

இந்நிலையில் ரவுடி வெட்டு குமார் நேற்று முன்தினம்கைதுசெய்யப்பட்டுள்ளமையுடன், அவரது சகோதரன் ஜெயா என்ற ரவுடி உட்பட சிலர் தலைமறைவாகியுள்ளனர் எனத்தெரிய வருகின்றது. வன்முறைக் கும்பலின் அட்டகாசத்தால்தினமும்அச்சத்துடன்வாழ்கிறோம் என அல்வாய் வடக்கு மகாத்மா கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

# சீனாவுடனான உறவில் கனடா எச்சரிக்கையாம்

## மார்க் கார்னியோ தெரிவிப்பு



சீனாவில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு கனேடியர்கள் விடுவிக்கப்பட்டுள்ளபோதும், அந்நாட்டுடன் உறவுகளை பேணுவதில் தொடர்ந்து கனடா எச்சரிக்கையாகவே இருக்கும் என கனடா வெளிவிவகார அமைச்சர் மார்க் கார்னியோ தெரிவித்தார்.

அமெரிக்காவின் பிடியாணை உத்தரவின் கீழ் கனடாவில் கைது செய்யப்பட்டு 3 வருடங்களாக தடுத்துவைக்கப்பட்டிருந்த சீனா –குவாவி தலைமை நிதி அதிகாரி மெங் வான்சோ கனடாவால் விடுவிக்கப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து சீனாவில் உளவு பார்த்த குற்றச்சாட்டில் 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் சீனாவில் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த மைக்கேல் கோவ்ரிக் மற்றும் மைக்கேல் ஸ்பாவர் ஆகிய இரண்டு கனேடிய பிரஜைகளும் சீனாவால் விடுவிக்கப்பட்டனர்.

இந்நிலையில் சீனாவுடனான கனேடிய உறவுகள் தொடர்ந்து எச்சரிக்கையுடனேயே இருக்கும் என கனடா வெளிவிவகார அமைச்சர் மார்க் கார்னியோ தெரிவித்தார்.

சீனாவுடன் சகவாழ்வு,போட்டி, ஒத்துழைப்பு மற்றும் சவால் என நான்கு வேறு அணுகுமுறைகளை கனடா பின்பற்றுகிறது.

சீனாவுடன் வர்த்தகம் மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வது போன்ற விடயங்களில் கனடா ஒத்துழைத்துச் செயற்படும். அதே நேரத்தில் கடந்த காலத்தில் ஒட்டாவா செய்தது போல் சிறுபான்மை உய்குர் முஸ்லிம்கள் மீதான சீனாவின் ஒடுக்குமுறை திபெத்தியர்கள் மற்றும் ஹொங்கொங் தொடர்பான சீனாவின் அணுகு முறைகள் விடயத்தில் அந்நாட்டுடனான உறவுகள் சவாலானதாகவே இருக்கும் எனவும் மார்க் கார்னியோ தெரிவித்தார்.

இரண்டுகனேடியப் பிரஜைகளும் தன்னிச்சையாகக்கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த வரை சீனா – கனடா உறவுகள் மேம்படுவதற்கான வழிகள் இருக்க வில்லை. ஆனால் தற்போது சிறிய முன்னேற்றம் உள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மூன்றாவது தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் கடந்த திங்கட்கிழமை கருத்து வெளியிட்ட கனேடிய பிரதமர் ஜஜ்ரின் ட்ரூடோ, 1970 முதல் சீனாவுடனான இராஜதந்திர உறவுகளை கட்டியெழுப்புவதில் தனது தந்தை ஈட்டிய வெற்றியை தொடர்ந்து பேணுவேன் என உறுதியளித்தார்.

ஆனால் மெங் கைது செய்யப்படுவதற்கு முன்பே சீனாவின் மனித உரிமை மீறல்கள் குறித்து கனடா கேள்வி எழுப்பி வந் தது பீஜிங்கை எரிச்சலடையச் செய்தது. இதனால் இரு நாடுகளுக்குமான உறவில் விரிசல் இருந்தது.

மெங் கைதைத் தொடர்ந்து பழிவாங்கும் நடவடிக்கையாகவே இரண்டு கனேடியர்கள் கைது செய்யப்பட்டனர் என்ற குற்றச்சாட்டை சீனா தொடர்ந்து மறுத்து வருகிறது. ஆனால் மெங் கைதுக்கும் இரு கனேடியர்கள் கைது செய்யப்பட்டமைக்கும் இரு கனேடியர்களின் கைதுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதாக நேற்று செய்தியாளர்களிடம் பேசிய கனடா வெளிவிவகார அமைச்சர் மார்க் கார்னியோ தெரிவித்தார்.



# லா பால்மா தீவில் எரிமலை வெடிப்பு; விமான சேவைகள் முடக்கப்பட்டுள்ளன

கடந்த சில தினங்களாக ஸ்பெயினில் உள்ள லா பால்மா தீவில் எரிமலை வெடிப்பு ஏற்பட்டு, மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டு வருகின்றனர். தற்போது கும்ரே வியெகா எரிமலையின் வெடிப்பு தீவிரமடைந்து வருவதால், லா பால்மா தீவில் உள்ள விமான நிலையம் மூடப்பட வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடங்கிய கும்ரே வியெகா எரிமலை வெடிப்பினால் இதுவரை 350 வீடுகள் அழிந்துள்ளன.

ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். சுமார் நான்கு கிலோமீற்றர் தொலைவு வரை எரிமலை வெடிப்பினால் ஏற்பட்ட புகை சூழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


# முன்பள்ளி ஆசிரியர் கொலை; 38 வயதான ஒருவர் கைதானார்



தென்கிழக்கு லண்டன் முன்பள்ளி பாடசாலை ஆசிரியரின் மரணம் குறித்து விசாரணை நடத்திய பொலிஸார் கொலை செய்த சந்தேகத்தின் பேரில் ஒருவரை கைது செய்துள்ளனர். 38 வயதான ஒருவர் கிழக்கு சசெக்ஸில் கைது செய்யப்பட்டார் என ஸ்கொட்லாந்து யார்ட் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

செப்டெம்பர் 17 ஆம் திகதி நண்பரைச் சந்திக்க நடந்து சென்றுகொண்டிருந்தபோது 28 வயதான குறித்த ஆசிரியர் தாக்கப்பட்டார். கொலையில் சந்தேகத்தின் பேரில் கடந்த வாரம் கைது செய்யப்பட்ட மேலும் இருவர் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

# ஐஸ்லாந்து நாடாளுமன்றத் தேர்தல் 50 வீதத்துக்கு மேல் பெண்கள் வெற்றி!



ஐஸ்லாந்தில் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அதிகளவில் பெண்கள் வெற்றிபெற்றுள்ளனர். இதன்மூலம் நாடாளுமன்றில் பெண்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஐரோப்பாவின் முதல் நாடாக ஐஸ்லாந்து பதிவாகியுள்ளது.

கடந்த சனிக்கிழமை நடந்த தேர்தலில் பதிவான வாக்குகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை எண்ணப்பட்ட நிலையில் 63 இடங்களைக் கொண்ட நாடாளுமன்றத்திற்கு 33 பெண்கள் தேர்ந்தெடுக்கப்படுவது பெரும்பாலும் உறுதியானது.

எனினும் உத்தியோகபூர்வ முடிவுகளை ஐஸ்லாந்து தேசிய தேர்தல் ஆணையம் இதுவரை வெளியிடவில்லை.

உலகில் ருவாண்டா, கியூபா மற்றும் நிகரகுவா ஆகிய மூன்று நாடுகள் மட்டுமே நாடாளுமன்றத்தில் ஆண்களை விட அதிகமான பெண்களின் பிரதிநிதித்துவத்தைக் கொண்டுள்ளன. அதே நேரத்தில் மெக்ஸிக்கோ மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் 50/50 பிரதிநிதித்துவத்தைக் கொண்டுள்ளன.

ஐரோப்பாவில், சுவீடன் மற்றும் பின்லாந்து ஆகியவை முறையே நாடாளுமன்றத்தில் 47% மற்றும் 46% பெண்கள் பிரதிநிதித்துவத்தைக் கொண்டுள்ளன.

மார்ச் மாதத்தில் வெளியிடப்பட்ட உலகப் பொருளாதார மன்றத்தின் (நிசிய்) அறிக்கையில் 371,000 மக்களைக் கொண்ட வடக்கு அட்லாண்டிக் தீவான ஐஸ்லாந்து உலகின் பாலின சமத்துவக் கொள்கையைக் கொண்ட முதல் நாடாக வகைப்படுத்தப்பட்டது.

இத் தேர்தலில் ஐஸ்லாந்தின் பிரதம மந்திரி கத்தரின் ஜாகோப்ஸ்டோடிர் தலைமையிலான, இடதுசாரிக் கூட்டணி பெரும்பான்மையாக இருந்தபோதும், பல இடங்களில் இக்கட்சி ஆசனங்களை இழந்துள்ளது.

இந்நிலையில் தேர்தல் பிரசாரத்தில் ஜாகோப்ஸ்டோடிரின் இடதுசாரிகள் கட்சி பெரும்பான்மை பெற்றால் கன்சர்வேடிவ் சுதந்திரக் கட்சி மற்றும் அடிப்படைவாத முற்போக்குக்கட்சி என்பன இடதுசாரிக்கட்சியுடன் இணைந்து செயற்படும் எனத் தெரிய வருகிறது. இதன்படி மற்றையகட்சிகளுடன் இணைந்து ஐஸ்லாந்தில் பெண்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட அரசாங்கம் அமைக்கப்படவுள்ளது.

இத்தேர்தலில் 21வயதான லென்யா ரன் ரஹா ஹரிம் எனும் பெண்ணும் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஐஸ்லாந்தின் மிகச்சிறிய வயதில் நாடாளுமன்ற உறுப்பினராக வெற்றி பெற்றவர் இவரென குறிப்பிடப்பட்டுள்ளது.



# தாடி வெட்ட தலிபான்கள் தடை விதிப்பு!

ஆப்கானிஸ்தானில் ஹெல்மாண்ட் மாகாணத்திலுள்ள சிகை அலங்கரிப்பு நிலையங்களில் தாடி வெட்ட தடை விதித்து தலிபான்கள் உத்தரவிட்டுள்ளனர்.

தாடி வெட்டுவது இஸ்லாமிய சட்டங்களை மீறுவதாக தெரிவித்துள்ள தலிபான்கள், தடையை மீறிவோருக்கு தண்டனை வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளனர்.

இதே மாதிரியான உத்தரவுகள் தங்களுக்கும் கிடைத்துள்ளன என தலைநகர் காபூலில் உள்ள சிகை அலங்கார நிலைய உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் முன்பு ஆட்சியைக் கைப்பற்றியுள்ள நிலையில் அங்கு தற்போது கடுமையான இஸ்லாமிய சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

1996 முதல் 2001 வரை தலிபான்கள் ஆட்சியில் இருந்தபோது, இஸ்லாமியர்கள் ஆடம்பரமான சிகை அலங்காரங்களை செய்துகொள்ள தடைவிதித்தனர். ஆண்கள் கட்டாயம் தாடி வளர்க்க வேண்டும் என்று வலியுறுத்தியமையும் குறிப்பிடத்தக்கது.

எனினும் தலிபான்களை தோற்கடித்து அமெரிக்கா ஆதரவுடனான ஆட்சி அமைத்த பின்னர் அங்கு ஆடம்பர சிகையலங்காரங்களில் இளைஞர்கள் அதிக ஆர்வம் காட்டி வந்தமை குறிப்பிடத்தக்கது.





# புதிய வேளாண் சட்டங்களுக்கு எதிர்ப்பு நாடு தழுவிய முழு அடைப்பு போராட்டம்

இந்திய மத்திய அரசின் வேளாண் சட்டங்களுக்கு எதிராக நாடு முழுவதும் இன்று முழு அடைப்பு போராட்டம் நடைபெற்றது. இதையொட்டி பல்வேறு மாநிலங்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டிருந்தன.

இந்திய மத்திய அரசின் புதிய வேளாண் சட்டங்களுக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் ஒப்புதல் தந்து ஓராண்டு நிறைவு பெற்றுள்ளது. இதையொட்டி வேளாண் சட்டங்களை எதிர்த்தும் விவசாயிகளுக்கு ஆதரவாகவும் இந்தியா முழுவதும் இன்று 10 மணிநேர முழு அடைப்பு போராட்டம் நடைபெற்றது. காலை 6 மணிக்கு தொடங்கிய இப்போராட்டத்திற்கு தமிழகம் மற்றும் புதுச்சேரியில் தி.மு.க., காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட், விடுதலைச்சிறுத்தைகள் ஆகிய கட்சிகளின் தொழிற்சங்கங்கள் ஆதரவு தெரிவித்துள்ளன.

இந்த முழு அடைப்பு போராட்டத்திற்கு, தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம், ஓட்டோ டெம்போ ஓட்டுனர்கள் சங்கம், மற்றும் தொழிற்சாலை நிர்வாகிகளைச் சந்தித்தும் ஆதரவு திரட்டியுள்ளனர். இதையடுத்து புதுச்சேரியில் பேருந்துகள், ஓட்டோ டெம்போக்களும் கேரளாவில் அரசுப் பேருந்துகளும் ஓடவில்லை. பஞ்சாப், டெல்லி, மேற்கு வங்கம் உள்ளிட்ட வடமாநிலங்கள் பலவற்றிலும் முழு அடைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததால், அந்தந்த மாநிலங்களில் பொலிஸ் பாதுகாப்பு அதி கரிக்கப்பட்டிருந்தது.



# புற்றுநோய் பாதிப்பில் 7.9 வீதம் சிறுவர்கள்!

இந்தியாவில் புற்றுநோயாளிகளில் 7.9 சதவீதமானோர் 14 வயதிற்குட்பட்ட சிறார்கள் என அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. இந்தியத் தேசியப் புற்றுநோய்ப் பதிவேடு திட்டத்தின்படி இந்தத்தகவல் தெரியவந்துள்ளது. கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டுவரை இந்தியாவில் 96 மருத்துவமனைகளில் புதிதாகப் பதிவு செய்யப்பட்ட 6 லட்சத்து பத்தாயிரம் புற்றுநோயாளிகளில் 7.9 சதவீதம் பேர் 14 வயதுக் குட்பட்ட சிறுவர்கள் என்று தெரியவந்துள்ளது.

புதிதாகப் பதிவுசெய்யப்பட்ட புற்றுநோயாளிகளில் 48.7 சதவீதம் பேர் புகையிலைப் பொருள்களின் பயன்பாடு காரணமாக மட்டும் பாதிக்கப்பட்டுள்ளார் எனவும் அப் பதிவேடு கூறுகிறது. இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகமும் தேசிய நோய்த் தகவல் ஆய்வு மையமும் நடத்திய ஆய்வில் இவை அறியப்பட்டுள்ளன.

# மத்திய அரசு கூடுதல் தடுப்பூசி அளித்தால் அடுத்த மெகா தடுப்பூசி முகாம் நடக்கும்

தமிழகத்தில் தற்போது 3 லட்சம் தடுப்பூசிகள் மட்டுமே கையிருப்பில் உள்ளன என அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் கொரோனா பரவுவதை தடுக்க அரசு சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி செலுத்துவதை தமிழக அரசு தீவிரப்படுத்தி வருகிறது.

கடந்த 12 ஆம் திகதி தமிழகத்தில் முதல் மெகா கொரோனாத் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. இந்த முகாமில் 28 லட்சத்து 91 ஆயிரத்து 21 பேர் கொரோனாத் தடுப்பூசி போட்டுக்கொண்டனர். இதையடுத்து கடந்த 19 ஆம் திகதி நடைபெற்ற 2 ஆவது தடுப்பூசி மெகா முகாமில் 16 லட்சத்து 43 ஆயிரத்து 879 பேர் தடுப்பூசி போட்டுக்கொண்டனர். இந்தச் சூழலில் தமிழகத்தில் நேற்று 3 ஆவது மெகா தடுப்பூசி முகாம் நடைபெற்றது.



தமிழகம் முழுவதும் நேற்று 20 ஆயிரம் மையங்களில் கொரோனாத் தடுப்பூசி போடும் பணி நடைபெற்றது. இந்த முகாம்கள் மூலம் 15 லட்சம் பேருக்கு தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதற்காக 29 லட்சம் 'டோஸ்' தடுப்பூசிகள் அனைத்து மாவட்டங்களுக்கும் தேவைக்கேற்ப பிரித்து வழங்கப்பட்டிருந்தது. தமிழகத்தில் நிர்ணயிக்கப்பட்ட 15 லட்சம் பேர் என்ற இலக்கு மதியம் 2.15 மணிக்கே கடந்து தொடர்ந்து தடுப்பூசி போடப்பட்டது. அந்த வகையில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கைவிட 24 லட்சத்து 85 ஆயிரத்து 814 பேருக்கு கொரோனாத் தடுப்பூசி போடப்பட்டு சாதனை படைக்கப்பட்டது. தமிழகத்தில் நேற்று ஒரே நாளில் மட்டும் 14 லட்சத்து 90 ஆயிரத்து 814 பேர் முதல் தவணை தடுப்பூசியும், 9 லட்சத்து 95 ஆயிரம் பேர் இரண்டாம் தவணைத் தடுப்பூசியும் போட்டுள்ளனர்.

இந்த நிலையில், மத்திய அரசு கூடுதல் தடுப்பூசி அளித்தால் நான்காவது முறையாக மெகா தடுப்பூசி முகாம் நடத்தப்படும் என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார். இது தொடர்பாக சென்னையில் செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அவர், தமிழகத்தில் 3 லட்சம் தடுப்பூசிகள் மட்டுமே கையிருப்பில் உள்ளன. மத்திய அரசு கூடுதலாக 50 லட்சம் தடுப்பூசிகள் அனுப்பினால், நான்காவது வாரமாக மெகா தடுப்பூசி முகாம் நடத்துவது பற்றிய அறிவிப்பு வெளியாகும். தடுப்பூசி செலுத்துவதை திருவிழா போல தமிழகம் முழுவதும் கொண்டாடி வருகிறோம். அதிகமான மக்கள் தடுப்பூசி செலுத்திக் கொள்கிறார்கள் என்றும் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.



# காங்கிரஸில் அதிக உறுப்பினர்களை சேர்ப்பவருக்கு தங்க மோதிரம் பரிசு

தென்சென்னை மாவட்ட காங்கிரஸ் சார்பில் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் 77 ஆவது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. விழாவுக்கு மாவட்ட தலைவர் எம்.ஏ.முத்தழகன் தலைமை தாங்கினார். மாநில தலைவர் கே.எஸ்.அழகிரி, மேலிட பார்வையாளர் ஸ்ரீவல்லபிரசாத் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் கலந்துகொண்டனர். இந்தக்கூட்டத்தில் ராகுல் காந்தி காங்கிரஸ் தலைவராக பொறுப்பேற்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கட்சி நிர்வாகிகளை ஊக்கப்படுத்தும் வகையில் அறிவிப்பொன்றையும் மாவட்ட தலைவர் முத்தழகன் அறிவித்தார். காங்கிரஸில் அதிகமான உறுப்பினர்களைச் சேர்ப்பவர்களுக்கு ஒரு பவுண் தங்க மோதிரம் பரிசாக வழங்கப்படும் என்றும் இரண்டாவது இடத்தைப் பிடிப்பவர்களுக்கு 4 கிராம் தங்க மோதிரம் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். இந்த அறிவிப்பைத் தொடர்ந்து உறுப்பினர் சேர்க்கையில் நிர்வாகிகள் ஆர்வம் காட்டுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ஊரடங்குகளிலும் தொடர்கிறது கல்முனையில் காணி அபகரிப்பு



ஊரடங்கு வேளையையும் பொருட்படுத்தாது கல்முனைப் பிரதேசத்தில் தமிழர்களின் காணியை அபகரிக்கும் செயற்பாடு தொடர்வதாக குற்றச்சுமத்தப்படுகிறது. கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பெரிய நீலாவணையில் தமது காணி எனக் கூறி கடந்த சனிக்கிழமைகாணியினுள்நுழைந்த சிலர் காணியினை அளந்து எல்லையிட முனைந்தனர்.

அச்சமயம் இளைஞர் பொதுமக்கள், கிராம உத்தியோகத்தர்உட்படதமிழ்இளைஞர் கல்முனைப் பிராந்திய உறுப்பினர்கள் விரைந்ததை அடுத்து காணி அளக்க வந்த குழுவினர் அவ்விடத்தை விட்டு ஓடியுள்ளனர்.

இதனையடுத்து கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் மற்றும் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து மக்கள் கலைந்து சென்றனர்.

மேலும் இது தொடர்பில் கருத்து தெரிவித்த இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வாலிப முன்னணி துணைச் செயலாளர் அ.நிதான்சன் கூறுகையில்:

கொரோனா பெரும் தொற்றுக் காரணமாக மக்கள் முடங்கிய நிலையிலும் அரச பொறிமுறை தடைப்பட்ட நிலையிலும் இவ்வாறு காணிகளை எவ்விதமான அறிவிப்பும்இன்றி கிராம உத்தியோகத்தருக்குத் தெரிவிக்காமல் காணி அளக்க வந்தமை சந்தேகத்தை வலுப்படுத்தி உள்ளது எனவும், இது சட்டவிரோத ஆக்கிரமிப்பாக பல்வேறு சந்தர்ப்பங்களில் அரச காணிகள் தனியார்மயப்படுத்துவதை தடுக்க பொதுக்கட்டமைப்பு அவசியம் என்பதோடு கல்முனை வடக்கு பிரதேச செயலக எல்லையினுள் சட்டவிரோத காணி ஆக்கிரமிப்பில் ஈடுபடுவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்தார்.

## திருகோணமலை குச்சவெளி பகுதியில் இரு குழுக்களுக்கு இடையில் மோதல்



திருகோணமலை– குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரண்டு குழுக்களுடையில் ஏற்பட்ட சண்டையில் கைது செய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்களையும் இம்மாதம் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதவான் இன்று உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ஐந்தாம் வட்டாரம்– திரியாய், குச்சவெளி பகுதியைச் சேர்ந்த 18, 20, 21 மற்றும் 23 வயதுடைய நான்கு இளைஞர்களே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குச்சவெளி பிரதேசத்தில் இரண்டு இளைஞர் குழுக்களுக்கிடையில் நீண்டகாலமாக இருந்து வந்த பகைமை காரணமாக ஏற்பட்ட வாய்த்தர்க்கங்கள் பின்னர் கைகலப்பாக மாறியதில் இருவர் படுகாயங்களுடன் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் சம்பவங்களுடன் தொடர்புடைய இரு குழுவிலும் இருந்து நால்வரை கைது செய்த பொலிஸார், திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குச்சவெளி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் திசாநாயக்கவின் தலைமையில் நடைபெற்றது

2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் கிராமங்களின் அபிவிருத்தி தொடர்பான அபிவிருத்தி குழுக் கூட்டம் இராஜாங்க அமைச்சர் விமல வீர திசாநாயக்கவின் தலைமையில் இன்று (திங்கட்கிழமை) அம்பாறையில் நடைபெற்றது.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் வழிகாட்டலுக்கிணங்க இடம்பெற்ற இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் லோகான் ரத்வத்த, அம்பாறை மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர் டபிள்யு.டி.வீரசிங்க, திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் திலக் ராஜபக்ஷ, கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மிலான் ஜயதிலக்க மற்றும் நகரசபை, பிரதேச சபை உறுப்பினர்கள், எம்.பிக்களின் இணைப்பாளர்கள், பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான விசேட வேலைத்திட்டம் – 2022 இன் கீழ் வாழ்வாதார அபிவிருத்தி, பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, சூழல் மற்றும் பேண்தகு அபிவிருத்தி, சமூக நலனோம்புகை மற்றும் சமூக அபிவிருத்தி ஆகிய நான்கு பிரதான அபிவிருத்தி கருத்திட்டங்களை மையமாகக் கொண்ட வேலைத்திட்டங்கள் முன்மொழியப்பட்டு ஆராயப்பட்டன.

## பட்டிருப்பு பாலத்திற்கு அருகில் மோட்டார் குண்டு ஒன்று மீட்பு



மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பட்டிருப்பு பாலத்திற்கு அருகாமையில் இருந்து மோட்டார் குண்டு ஒன்று இன்று மீட்கப்பட்டுள்ளதாக களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு பட்டிருப்பு பாலத்தில் மீன் பிடித்துக் கொண்டிந்த மீனவர்களின் வலையில் மோட்டார் குண்டு ஒன்று சிக்கியுள்ளது.

இவ்விடயம் குறித்து மீனவர்கள் உடனடியாக களுவாஞ்சிகுடி பொலிஸாருக்கு அறிவித்தமையைத் தொடர்ந்து விரைந்த களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உபுல் குணவர்த்தன மற்றும் களுவாஞ்சிகுடி விசேட அதிரடிப்படையினர் உள்ளிட்ட குழுவினர் குண்டைப் பார்வையிட்டனர். இந்நிலையில் நீதிமன்ற உத்தரவு பெற்ற பின்னர் விசேட அதிரடிப்படையின் குண்டு செயலிழக்கும் பிரிவினரால் இக்குண்டு செயலிழக்கச் செய்வதற்கு எடுத்துச் செல்லப்படவுள்ளதாகவும் இது தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன எனவும் களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்தனர்.

## அம்பாறை உமரியில் காடழிப்பு மக்கள் கண்டனம் தெரிவிப்பு

அம்பாறைஉமரி கிராமம் பகுதியிலுள்ள காடுகளின் மரங்களை வெட்டி தீயிட்டு, காடழிப்பு நடவடிக்கையில் சிலர் ஈடுபட்டு வருகின்ற எனவும் இதனால் சுற்றுச் சூழல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் பொது மக்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

களப்பு மற்றும் வட்டிகுளம் பகுதியை அண்மித்த பகுதிகளிலுள்ள கிராமங்களிலுள்ள இந்த காடுகளின் மரங்களை சிலர் வெட்டி, அதனை தீயிட்டு அழித்து நிலங்களை ஆக்கிரமிக்கும் நடவடிக்கையினை சில வாரங்களாக மேற்கொண்டு வருகின்றனர் என குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

அதாவது, உமரி கடற்கரை பகுதியிலுள்ள சிலர் தமது சொந்த காணிகளை தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களுக்கு விற்பனை செய்துவிட்டு, தற்போது தாங்கள் குடிமனைகளை கட்டி சேனைப்பயிர் செய்கை செய்யப் போகிறோம் என இதுவரை சுமார் 10 ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டுள்ளன.

குறித்த சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

ஆகவே இதன் பாதிப்பினை உணர்ந்து உடனடியாக இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அதிகாரிகள் முன்வர வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

# ஊடகவியலாளரை அச்சுறுத்தியமைக்குக் கண்டனம் வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கம் தெரிவிப்பு

ஊடகவியலாளரை அச்சுறுத்தி நீதியை நசுக்கும் செயற்பாட்டிற்கு வன்மையான கண்டனங்களை தெரிவிப்பதாக வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

மன்னார் பண்டிவிரிச்சானைச் சேர்ந்த சுயாதீன ஊடகவியலாளர் ரஞ்சன் ரவிக்குமாரின் வீடு இனம் தெரியாத நபர்களால் நேற்றையதினம் தாக்கப்பட்டிருந்ததுடன், அருட்தந்தை ஒருவர் தொலைபேசியூடாக அவருக்கு அச்சுறுத்தலும் விடுத்திருந்தார் எனக் கூறப்பட்டது.




இந்த விடயங்கள் தொடர்பாக வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கம் அனுப்பிவைத்துள்ள செய்தி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

மன்னார் கோவில்மோட்டை பகுதியில் விவசாயிகளின் காணியில் ஏற்பட்ட குழப்பநிலை தொடர்பான செய்தியைச் சேகரிக்கச்சென்ற ஊடகவியலாளரின் வீடு இனம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டதுடன், அருட்தந்தை ஒருவர் தொலைபேசி வாயிலாக குறித்த ஊடகவியலாளரை அச்சுறுத்தியும் இருந்தார்.

இதனை, ஊடகவியலாளர்களின் சுதந்திரமான ஈடுபாட்டுக்கு இடைஞ்சலை ஏற்படுத்துவதுடன் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தை நசுக்கும் ஒரு செயற்பாடாகவே எமது சங்கம் பார்க்கின்றது.

பாதிக்கப்பட்ட மக்களின் குரலாக செயற்பட்டு வந்த குறித்த ஊடகவியலாளர் அச்சுறுத்தப்பட்டமையானது மன்னிக்கமுடியாததுடன் அதன் மூலம் உண்மையினையும் நியாயத்தினையும் உறங்கசெய்துவிடலாம் என்பது சமூக விரோதிகளின் எண்ணமாக இருக்கின்றது.

அமைதியையும்,சமத்துவத்தையும் நிலைநாட்டவேண்டிய மதகுரு ஒருவரே வன்முறையைத் தூண்டும் விதமாக தொலைபேசி வாயிலாக அச்சுறுத்தல் விடுப்பது ஏற்றுக்கொள்ளமுடியாத, அநாகரிகமான செயலாகவே நோக்க முடியும்.

தவறுகளைச் சுட்டிக்காட்டி உண்மைகளை வெளிக்கொண்டுவரும், ஊடகவியலாளர்கள் மீது நேரடியாகவும் மறைமுகமாகவும் விடுக்கப்படும் இவ்வாறான அச்சுறுத்தல்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும். அத்துடன் இதுபோன்ற வன்முறைச் சம்பவங்கள் தொடரும் பட்சத்தில் அது நாட்டின் சட்டத்தின் ஆட்சியைக் கேள்விக்குட்படுத்துவதுடன், ஜனநாயக உரிமையையும் மறுதலித்து நிற்கின்றது. இதுபோன்ற அநீதியான சம்பவங்களிற்கு ஊடகவியலாளர்களின் நலன் மீது அக்கறை கொண்ட அமைப்பு என்ற வகையில் வவுனியா மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் சங்கம் தனது வன்மையான கண்டனங்களையும், அதிருப்தியையும் தெரிவித்துக்கொள்கின்றது.

அத்துடன் அவரை தொலைபேசியில் அச்சுறுத்திய அருட்தந்தை மற்றும் அவரது வீட்டின் மீது தாக்குதல் மேற்கொண்டவர்கள் அடையாளம் காணப்பட்டு, அவர்களிற்கான தண்டனையைப் பெற்றுக் கொடுப்பதற்கு பொலிஸார் விரைந்து நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று நாம் வலியுறுத்தி நிற்கின்றோம். - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொவிட் தடுப்பூசி ஏற்றுவதால் பாலியல் பாதிப்பு ஏதும் வராது!

## அடித்துக் கூறுகிறார் வைத்தியநிபுணர்

கொவிட் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வது பாலியல் ஆரோக்கியத்தில் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது என்று சர்வதேச ஆராய்ச்சிகள் சுட்டிக்காட்டுகின்றன என அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பாலியல் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் அஜித் கரவிட்ட தெரிவித்தார்.



சமூக ஊடகங்கள் அல்லது பிற ஊடகங்களில் பரவும் ஆதாரமற்ற தகவல்களுக்கு பொதுமக்கள் ஏமாறாமல், கொவிட் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுமாறு அவர் பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் சமீபத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே விசேட வைத்திய நிபுணர் அஜித் கரவிட்ட இந்த கருத்துக்களை தெரிவித்தார்.

18 - 30 வயதுக்குட்பட்டவர்கள் தற்போது தடுப்பூசியை பெற தயக்கம் காட்டுகின்றனர் எனவும், அதிலும் சீனாவில் தயாரிக்கப்பட்ட சினோபோர்ம் தடுப்பூசியை அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று, இந்த தடுப்பூசியை போட்டுக்கொண்டால் பாலியல் ரீதியான நடவடிக்கைகள் பாதிப்படைந்து, இதன் மூலம் குழந்தை பாக்கியம் கிடைக்காமல் போகும் என்ற கருத்து சமூகத்தில் பரவுவதாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், வெளிநாடு செல்ல காத்திருப்போருக்கு, சினோபோர்ம் தடுப்பூசி குறிப்பிட்ட சில நாடுகளில் அங்கீகரிக்கப்படவில்லை என்று தெரிவித்தே இவர்கள் தடுப்பூசியை பெற்றுக் கொள்ள தயங்குகின்றனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் இவ்வாண்டு இதுவரையில் 18,900 பேருக்கு டெங்கு; 10 பேர் சாவு!



இலங்கையில் இவ்வாண்டு இதுவரை 18,900 க்கும் மேற்பட்ட டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளமையுடன், 10 டெங்கு மரணங்களும் இடம்பெற்றுள்ளன எனத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவுத் தரவுகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் எப்போதும் டெங்கு நோய் குறித்து விழிப்புடன் இருக்குமாறு தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு வலியுறுத்தியுள்ளது.


நீர் மற்றும் குப்பைகள் தேங்காத வகையில் சுற்றுச் சூழலைச் சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் டெங்கு நுளம்பு பரவலைக் கட்டுப்படுத்த முடியும். நுளம்புக் கடியைத் தவிர்க்க நுளம்பு வலைகள், உடலை முழுமையாக மறைக்கும் நீண்ட ஆடைகளை அணிந்து கொள்ளுங்கள். கொசு விரட்டி சுருள்களைப் பயன்படுத்துவதுடன், நுளம்புகள் அதிகளவில் நுழையக் கூடிய நேரங்களில் வீட்டுக் கதவுகள் மற்றும் ஜன்னல்களைப் மூடி வைத்திருக்குமாறும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது.

காய்ச்சல், தலைவலி, மூட்டு வலி மற்றும் 2 நாள்களுக்கு மேல் தொடரும் குமட்டல், வாந்தி போன்றவை டெங்கு நோயின் பொதுவான அறிகுறிகளாகும். இவ்வாறான அறிகுறிகள் இருந்தால் மருத்துவரை அணுகுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# திலீபன் நினைவாக லண்டனில் குருதிக் கொடை









தியாகி திலீபனின் நினைவு தினத்தை ஒட்டி நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று லண்டன் எட்க்வார் குருதிக் கொடை நிலையத்தில் இரத்த தான நிகழ்வு இடம்பெற்றது. அதில் பங்குபற்றிய ஈழத் தமிழ் இளம் உறவுகளைப் படத்தில் காணலாம்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.09.2021இல் வெளியிடப்பெற்றது.